**செய்தி வெளியீடு எண் : 041** **நாள்: 07.01.2022**

செய்தி வெளியீடு

மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.மு.பெ.சாமிநாதன் அவர்கள் தலைமையில் திருநெல்வேலி மண்டலத்திற்குட்பட்ட மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்களின் பணி ஆய்வுக் கூட்டம் இன்று (07.01.2022) சென்னையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் திருநெல்வேலி, தென்காசி, தூத்துக்குடி, கன்னியாகுமரி, விருதுநகர் ஆகிய 5 மாவட்டங்களின் செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்களின் பணி குறித்து மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் அவர்கள் விரிவான ஆய்வு மேற்கொண்டார். இக்கூட்டத்தில் மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் அவர்கள் தனது தலைமையுரையில்,

"மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு தமிழக அரசு பல்வேறு திட்டங்களை சிறப்பாகச் செயல்படுத்தி வருகிறது. அத்திட்டங்களை பொதுமக்களுக்கு எடுத்துச் செல்லும் பணியினை மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்கள் சிறப்பாக மேற்கொள்ள வேண்டும். மேலும், அவர்களின் பணிகளை செம்மைப்படுத்துகின்ற வகையில் அனைத்து மாவட்டங்களும் ஆறு மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

இம்மண்டலங்களுக்குட்பட்ட தங்களது மாவட்டங்களில் உள்ள மணிமண்டபங்கள், நினைவகங்கள் ஆகியவற்றை சிறந்த முறையில் பராமரித்திட அரசின் நிதியை எதிர்நோக்காமல் ரோட்டரி, அரிமா, உள்ளூர் வியாபார சங்கங்கள், தொண்டுள்ளம் படைத்த தன்னார்வலர்களை அணுகி இப்பணிகளை மேற்கொள்ள முயற்சி எடுக்க வேண்டும். மாவட்டங்களில் உள்ள மணிமண்டபங்களை சுற்றுலாப் பயணிகள், பொதுமக்கள் அறிந்திடும் வகையில், நெடுஞ்சாலையோரங்களில் வழிகாட்டிப் பலகைகள் 5 கி.மீ.க்குள்ளாக அமைத்திட ஆவண செய்ய வேண்டும். அதைப்போல, நகரப் பகுதிகளில் முக்கிய இடங்களில் அறிவிப்புப் பலகைகளை அமைத்திட வேண்டும். மேலும், மாவட்டங்களில் பொதுமக்களால் அறியப்படாத சுதந்திரப் போராட்ட வீரர்கள் மற்றும் மொழிப் போர்த் தியாகிகள் ஆகியோரை அறிந்து கொள்ளும் வகையிலும், அன்னாரின் புகைப்படங்கள் மற்றும் அவரைப் பற்றிய சிறுகுறிப்புடன் மணிமண்டபங்கள் மற்றும் பொது இடங்களில் மாவட்ட ஆட்சியரின் ஒப்புதலுடன் காட்சிப்படுத்திட உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

மேலும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளவாறு சுதந்திர தினத்தன்றும், குடியரசு தினத்தன்றும் மாவட்டங்களில் உள்ள தியாகிகளின் சிலைகளை தூய்மைப்படுத்தி, மாலை அணிவித்து மரியாதை செலுத்திட வேண்டும். அவர்களின் பிறந்தநாள் விழாவின்போது சுதந்திரப் போராட்ட தியாகிகளின் சிலைகளுக்கு வண்ண மின்விளக்குகளால் அலங்கரிக்க வேண்டும் எனவும் அறிவுறுத்தினார். மேலும் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் நிர்ணயிக்கப்பட்ட தமிழரசு இதழின் சந்தா இலக்கினை ஒரு மாத காலத்திற்குள் எய்திட வேண்டும்.

மாண்புமிகு முதலமைச்சர் மற்றும் மாண்புமிகு அமைச்சர் பங்கேற்கும் நிகழ்ச்சிகளை மாவட்ட ஆட்சித் தலைவரின் வழிகாட்டுதலின்படி, செவ்வனே நடைபெறத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டுமென்றும், மேலும். மாண்புமிகு முதலமைச்சர் அறிவிக்கின்ற அனைத்து திட்டங்கள் குறித்து பத்திரிகை, ஊடகம் மற்றும் சமூகவலைதளம் மூலம் விளம்பரப் பணிகளை மேற்கொண்டு அவை மக்களுக்கு சென்றடைவதை உறுதிப்படுத்த வேண்டும். செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்கள் அர்ப்பணிப்புடன் பணியாற்றி அரசுக்கும் மக்களுக்கும் இணைப்புப் பாலமாக செயல்பட வேண்டும்" எனத் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் திரு. மகேசன் காசிராஜன் இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையுரையாற்றி பல்வேறு அறிவுரைகளை வழங்கினார்.

முன்னதாக செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் முனைவர் வீ.ப. ஜெயசீலன் இ.ஆ.ப., அவர்கள் வரவேற்புரை ஆற்றினார்.

இக்கூட்டத்தில் கூடுதல் இயக்குநர்கள், இணை இயக்குநர்கள், துணை இயக்குநர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**